தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 1-11-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தக்காளி பயிருக்கான விலை முன்னறிவிப்பு

இந்தியாவில் பயிரிடப்படும் காய்கறிகளில் தக்காளி முக்கிய பயிராகும். இவை மொத்த காய்கறி உற்பத்தியில் 8.23 சதவிகிதம் பங்கு வகிக்கின்றது. வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் மூன்றாவது முன்கூட்டிய அறிக்கையின்படி, 2015-16 ஆம் ஆண்டு இந்தியாவில் தக்காளி 7.60 லட்சம் எக்டர்பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 183.99 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவின் மொத்த தக்காளி உற்பத்தியில் தமிழ்நாடு 5 சதவிகிதத்திற்கும் குறைவாகவே தக்காளி உற்பத்தியில் பங்களிக்கிறது. வேலூர், சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திண்டுக்கல், ஈரோடு மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்கள் தக்காளி உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும். தமிழ்நாட்டில் அனைத்து பருவங்களிலும் தக்காளி சாகுபடி செய்யப்பட்டாலும் தைப்பட்டம் தக்காளி சாகுபடிக்கு முக்கிய பருவமாக உள்ளது. பி.கே.எம்1, மருதம், பையூர் 1 மற்றும் கோ.டி.எச் 1ஆகிய இரகங்கள் தமிழ்நாட்டில் அதிகளவு பயிரிடப்படுகின்றன.

உள்ளூர் வரத்து மட்டுமல்லாமல் அண்டை மாநிலங்களான ஆந்திர பிரதேசம் மற்றும் கர்நாடாகாவின் பங்களிப்பு உள்ளூர் தேவையை பூர்த்தி செய்கின்றன. இந்தியா பதப்படுத்தப்பட்ட தக்காளி விழுது, தக்காளி சாஸ், தக்காளி கெட்ச்அப் மற்றும் தக்காளி கூழ் போன்ற பல வடிவங்களில் பாகிஸ்தான், வங்காளம், நேபாளம், சவூதி அரேபியா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

வர்த்தக மூலங்களின்படி, கர்நாடகாவிலிருந்து கோயம்புத்தூர் சந்தைக்கு வரும் தக்காளியின் வரத்து அதிகரிக்கும் எனவும் தமிழ்நாட்டில் வழக்கமான மற்றும் தொடர்ச்சியான வரத்து வருவதால் தக்காளியின் விலை குறையும் என கணிக்கப்படுகின்றது. கேரள வியாபாரிகள் பெரும்பாலும் அருகிலுள்ள கோயம்புத்தூர் சந்தையிலிருந்து தக்காளியை

கொள்முதல் செய்கின்றனர். உடுமலைபேட்டை மற்றும் ஒட்டன்சத்திரம் பகுதிகளில் நல்ல விளைச்சல் உள்ளதால் ஒட்டன்சத்திரம் சந்தைக்கு வழக்கத்தைவிட வரத்து அதிகரித்து காணப்படுகின்றது. இதனால் தக்காளி விலை குறைந்து காணப்படுகிறது. மேலும், அறுவடை சமையத்தில் வடகிழக்கு பருவமழை அதிகரித்தால் விலை உயர வாய்ப்புள்ளது.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 13 ஆண்டுகளாக ஒட்டன்சத்திரம் மற்றும் கோயம்புத்தூர் சந்தைகளில் நிலவிய தக்காளி விலையை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் தரமான தக்காளி அறுவடையின் போது பண்ணை விலை கிலோவிற்கு ரூ.13-15 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விவசாயிகள் தங்கள் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641003.
தொலைபேசி: 0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641003.
தொலைபேசி: 0422-6611374 / 6611283

மக்கள் தொடர்பு அலுவலர்